# வலயக் கல்வி அலுவலகம் - கிளிநொச்சி
## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2020

| தரம் :07 | செயன்முறைத் தொழினுட்பம் | நேரம் : |
|---|---|---|
| | சுட்டெண் ........................................................................ | 2.00 மணி |

### பகுதி - I

❖ **மிகப் பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. எமது சுற்றுப்புறச் சூழலைக் கவர்ச்சிகரமாகப் பேணுவதன் மூலம் பெறக்கூடியவையாக அமைவது
1) மகிழ்ச்சி 2) கவலை 3) கோபம் 4) வெறுப்பு

02. மண்வளம் குன்றுவதற்குப் பின்வரும் எக்காரணங்கள் ஏதுவாக அமைகின்றன.
1) மண்ணரிப்பு நிகழ்தல்
2) கிளிரிசிடிய வேலி அமைத்தல்
3) வெட்டிவேர் போன்ற தாவர வேலிகளை உருவாக்கல்
4) பூசணி, வெள்ளரி போன்ற கொடிகளை நடுதல்

03. வயலில் நேரடியாக நாட்டப்படும் பயிர் வகைகளில் ஒன்று
1) கத்தரி 2) போஞ்சி 3) குறிஞ்சா 4) மிளகாய்

04. சமைக்கும் போது உடல், உடை என்பவற்றைப் பாதுகாப்பதற்கு அணியப்படும் ஆடை
1) யக்கற் 2) கம்பளிச்சட்டை 3) மேலங்கி 4) பருத்திச்சட்டை

05. தோல் சீவும் உபகரணமாகக் கொள்ளப்படுவது
1) கத்தி 2) வடிகட்டி 3) பீடர் (Peeder) 4) கிரேட்டர் (Grater)

06. முற்பரிகரிப்பு முறைகளை மேற்கொள்வதன் மூலம் நிறமாற்றத்தைத் தடுக்கக்கூடிய வழிமுறைகள் எவை?
1) எலுமிச்சம் பழச்சாறு சேர்த்தல் 2) இழையமைப்பை மாற்றுதல்
3) சுவைச் சரக்குகள் சேர்த்தல் 4) தோலைச் சீவுதல்

07. உணவை வெப்பமூட்டுவதால் கிடைக்கும் அனுகூலம் அல்லாதது
1) போசணைப் பெறுமானம் அதிகரிக்கும்
2) உணவு பழுதடையாது காணப்படும்
3) இலகுவில் சமிபாடடையும்
4) நுண்ணங்கிகள் அழிவடையும்

08. ——+|¦-—— இக் குறியீடு எந்த இலத்திரனியல் துணைக்கூறு ஆகும்?
1) உலர்மின்கலம் 2) மின்மோட்டார் 2) ஒலிபெருக்கி 4) கொள்ளளவி

09. பொருட்களின் சர்வதேச தரநியமத்திற்காக சர்வதேச ரீதியில் வழங்கும் தரச்சான்றுக்கான குறியீடு
1) SLS 2) ISO 3) ISI 4) BMI

10. இருமுனைவு இருவழி ஆளியின் புறத்தே காணப்படும் முனைகளின் எண்ணிக்கை யாது?
1) மூன்று 2) இரண்டு 3) ஆறு 4) ஒன்று



kalvi.lk

11. பொருட்களைக் கொள்வனவு செய்யும்போது நுகர்வோர் கவனம் செலுத்த வேண்டிய விடயம் யாது?
1) விலை 2) தரம் 3) தரநியமம் 4) மேற்கூறிய யாவும்

12. உலர்மின்கலத்தின் "வோல்ற்" அளவு
1) 1.5v 2) 2.5v 3) 3.5v 4) 4.5v

13. இலத்திரனியல் அட்டையின் மூலம் பணத்தைப் பெறுவதால் ஏற்படும் நன்மைகளில் ஒன்று
1) பாதுகாப்பு 2) அதிக பணம் பெறலாம்
3) இலாபம் 4) கடன் பெறலாம்

14. பிரதான போசணைச் சத்துக்களில் ஒன்று
1) கல்சியம் 2) இரும்பு 3) புரதம் 4) பொசுபரசு

15. தரையலங்கரிப்பின் போது கவனம் செலுத்த வேண்டிய விடயங்களில் ஒன்று
1) தரையின் தன்மை 2) தண்ணீருற்றுள்ள இடம்
3) மலிவான தரை 4) விலை கூடிய தரை

16. நீர்த் திருகுபிடியைப் பொருத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் உபகரணம் ஒன்று
1) தாங்கிக்கொழுக்கி 2) வால்வுக்குறைவு
3) வளைவிணைப்பு 4) சம அளவான குகை

17. உற்பத்தி ஒன்றிற்குத் தேவையான அடிப்படைக் காரணிகளாவன
1) நிலம் 2) உழைப்பு 3) மூலதனம் 4) மேற்கூறிய யாவும்

18. சிற்றளவு வணிகங்களை நடாத்திச் செல்லும் அமைப்புக்களில் ஒன்று
1) பங்குடமை வணிகம் 2) வணிக நடவடிக்கை
3) மூலதனம் 4) பொறுப்புக்கள்

19. விளம்பரம் தயாரிக்கும் போது அதில் இருக்க வேண்டிய முக்கிய விடயமாகக் கருதப்படுவது
1) தாளின் அளவு 2) தீர்மானம் 3) சுயாதீனம் 4) முப்பரிமாணம்

20. தரை அலங்காரத்துக்குப் பயன்படுத்தப்படும் மென்கூறுகளில் ஒன்று
1) கல்வேலி 2) இலாம்புகள் 3) தாவர வேலி 4) பாலம்

(20 x 1 = 20 புள்ளிகள்)

❖ **பொருத்தமான கூட்டினுள் சரி , பிழை இடுக.**

01. வளமான மேற்படை கழுவி அகற்றப்படல் மண்ணரிப்பாகும். ( )

02. கழிவுப் பொருட்கள் பிரதானமாக 4 வகைப்படும். ( )

03. உணவு சமைப்பவர் அணியும் ஆடை மேலங்கியாகும். ( )

04. மின் தற்காலிகமாக களஞ்சியப்படுத்தப்படுவது தடையிலாகும். ( )

05. தனியொருவருக்குச் சொந்தமான வணிகம் தனியாள் வணிகம் ( )

(5 x 2 = 10 புள்ளிகள்)



kalvi.lk

❖ **கீறிட்ட இடங்களில் மிகவும் பொருத்தமான விடையை எழுதுக.**

| **( இஞ்சி , கிளிரிசீடியா , சிக்மாஷ், விலைகாட்சிப்படுத்தாமை, நியமக்குறியீடு )** |
|---|

01. நிலக்கீழ்த் தண்டுத் துண்டங்களாகக் கொள்ளப்படுவது ............................................ ஆகும்.

02. சந்தை மோசடிகளில் ஒன்று ................................................ ஆகும்.

03. தரையின் திட்ட வரைபடத்தினை வரையும் போது ................................ பயன்படுத்தல் வேண்டும்.

04. உயிர்த்தடையாக ........................................... பயன்படுத்தலாம்.

05. குஞ்சுப் பருவத்திற்கு வழங்கப்படும் உணவு ............................................. ஆகும்.

(5 x 2 = 10 புள்ளிகள்)

## பகுதி - II

❖ **நீர் விரும்பிய ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. வீட்டுத்தோட்டத்தை வளமாகப் பேணுவோம்.
 1) வீட்டுத்தோட்டம் என்றால் என்ன?
 2) மண்ணரிப்பு என்றால் என்ன?
 3) பயிர்களுக்கு கூட்டெரு இடுவதன் நன்மைகள் மூன்று தருக. (3 x 5= 15 புள்ளிகள்)

02. சமையலறைக் கருவி உபகரணங்களைப் பயன்படுத்தி உணவைச் சமைத்துப் பரிமாறுதல்.
 1) உணவை வெப்பமூட்டுவதன் மூலம் கிடைக்கும் பயன்கள் மூன்று குறிப்பிடுக?
 2) சமையலறையில் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் நான்கு குறிப்பிடுக?
 3) உணவு சமைக்கும் இடம் எவ்வாறான இயல்புகள் கொண்டதாகக் காணப்பட வேண்டும்?

(3 x 5= 15 புள்ளிகள்)

03. குழாய்களை அமைப்போம் நீரைப் பாதுகாப்போம்
 1) நீர்க்குழாய் உபகரணங்கள் இரண்டைக் குறிப்பிட்டு ஆற்றப்படும் கருமங்களைக் குறிப்பிடுக?
 2) மின்சுற்று ஒன்றினை வரைக.
 3) நீர் விநியோகக் குழாயைத் திசை திருப்புவதற்காகத் தேவையான இடங்களில் பயன்படுத்தப்படும் நீர்க்குழாய் உபகரணங்கள் மூன்றைத் தருக.

(3 x 5= 15 புள்ளிகள்)

04. பல்வேறு வணிக அமைப்புக்களை இனங்காணல்
 1) சிற்றளவு வணிகங்களை நடாத்திச் செல்லும் அமைப்புக்கள் எவை?
 2) தனியார் உரிமை வணிகத்தின் நன்மைகள் இரண்டு தருக.
 3) உற்பத்தி ஒன்றிற்குத் தேவையான அடிப்படைக் காரணிகளைக் குறிப்பிடுக?

(3 x 5= 15 புள்ளிகள்)

05. காட்சிப் பாங்கினைப் பயன்படுத்தி மாதிரியுருக்களை உருவாக்குவோம்.
 1) உருவின் காட்சிப்பாங்கு என்றால் என்ன?
 2) விளம்பரம் தயாரிக்கும் போது அதில் இருக்க வேண்டிய முக்கிய விடயங்களைக் குறிப்பிடுக?
 3) தளத்திட்ட நியமக் குறியீடுகளின் படத்தினை வரைக.
 1) கூம்பு வடிவத் தாவரம் 2) இருக்கை 3) வீதி

(3 x 5= 15 புள்ளிகள்)

06. சந்தையை ஆய்வு செய்வோம்
 1) சந்தை என்றால் என்ன?
 2) நவீன சந்தையில் எவ்வாறு கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெறுகின்றன?
 3) சந்தை மோசடி என்றால் என்ன? (3 x 5= 15 புள்ளிகள்)



kalvi.lk

Education
கல்வி
අධ්‍යාපන

kalvi.lk

தரம் 01 - 10

# 3ம் தவணை

## REVISION | PAPER DISCUSSION

## ஆரம்பம் - 01.12.2024

மீட்டல் மற்றும் வினாத்தாள்
கலந்துரையாடல் வகுப்புகள்

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
இணைந்து கொள்ள முடியும்.

JOIN NOW

## புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன..

### கட்டண விபரங்கள்

**தமிழ் Medium**

| | |
|---|---|
| தரம் 01-02 | 2000/= |
| தரம் 03-05 | 2500/= |
| தரம் 06-10 | 3000/= |

**English Medium**

| | |
|---|---|
| தரம் 06-07 | 3500/= |

Education கல்வி අධ්‍යාපන

KALVI.LK

WHATSAPP
075 287 1457